DINAKARAN

11 JUNE 2022

PAGE 5

# புதுவைப் பல்கலைக்கழகம்

(NAAC இன் A பிரிவு தரச்சான்றிதழ் பெறப்பட்ட நிறுவனம்)

புதுச்சேரி - 605 014.

## பட்டியலின மாணவர்களுக்கு இந்தியக் குடிமைப் பணிக்கான(UPSC) இலவசப் பயிற்சி

பட்டியலின மாணவர்களுக்கு இந்தியக் குடிமைப் பணிக்கான UPSC Civil Service Examination) இலவசப் பயிற்சி மத்திய அரசின் சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் டாக்டர் அம்பேத்கர் மையத்தின் வழியாகப் புதுவைப் பல்கலைக்கழகம் இந்தியக் குடியுரிமைப் பணிக்கான இலவசப் பயிற்சியினை (முதன்மை மற்றும் மையப்பாடங்கள் இரண்டுக்குமான) வழங்க முடிவு செய்துள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆர்வமுள்ள மாணவர்கள் http://www.pondiuni.edu.in/department/dace என்ற இணைய தள முகவரி வாயிலாக விண்ணப்பிக்கலாம். தொடர்புடைய ஆவணங்களுடனான விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 15.06.2022.

பதிவாளர்

DINAKARAN

11 JUNE 2022

PAGE 16

# உலக தரவரிசையில் இடம் பிடித்து புதுவை பல்கலைக்கழகம் சாதனை

புதுச்சேரி, ஜூன் 11: க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையில் புதுச்சேரி பல்கலைக்கழகம் உலகின் முதல் 1,000 பல்கலைக்கழகங்களில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

க்யூஎஸ் (QS) உலக பல்கலைக்கழக தரவரிசை-2023 பதிப்பை வெளியிட்டது. இதில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 801-1000 ரேங்க் வரம்பில் இடம்பிடித்துள்ளது. இந்த ஆண்டு 100 நாடுகளை சேர்ந்த 2,462 கல்வி நிறுவனங்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளன. இதில் 41 இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை 2023ல் இடம்பெற முடிந்தது.

இந்த தரவரிசையானது 8 அளவுருக்கள் கல்வி நற்பெயர், பணியமர்த்துபவர் நற்பெயர், ஆசிரியர், மாணவர் விகிதம், ஆசிரியர்களுக்கான மேற்கோள்கள், சர்வதேச ஆசிரிய விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது. சர்வதேச மாணவர் விகிதம், சர்வதேச ஆராய்ச்சி நெட்வொர்க் மற்றும் வேலைவாய்ப்பு முடிவுகள், தொற்றுநோய் சூழல் இருந்தபோதிலும் பல்கலைக்கழகம் மேலே உள்ள அனைத்து அளவுருக்களிலும் நல்ல மதிப்பெண்களை பெற்றது. க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை கட்டமைப்பின்படி, ஆராய்ச்சி தாக்கம் மற்றும் கற்பித்தல், அர்ப்பணிப்பு தவிர, உலக அளவில் புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கான ஒரு ஆசிரியர்களுக்கான மேற்கோள்கள் வலுவான குறிகாட்டியாகும்.

புதுச்சேரி பல்கலைக்கழகம் 2020ம் ஆண்டு முதல் உலக பல்கலைக்கழக தரவரிசையில் பங்கேற்று வருகிறது. 2010ம் ஆண்டு முதல் க்யூஎஸ் ஆசிய பல்கலைக்கழக தரவரிசை, க்யூஎஸ் பிரிக்ஸ் பல்கலைக்கழக தரவரிசையில் முனைப்புடன் பங்கேற்கிறது. டைம்ஸ் உயர்கல்வி உலக பல்கலைக்கழக தரவரிசை, டைம்ஸ் உயர்கல்வி தாக்க தரவரிசை, பொதுநல பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு மற்றும் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு போன்ற தேசிய அளவிலான தரவரிசைகள் உட்பட அனைத்து சர்வதேச தரவரிசைகளிலும் புதுச்சேரி பல்கலைக்கழகம் கனிசமான மதிப்பெண்களுடன் தரவரிசையில் பங்கேற்று வருகிறது.

இத்தருணத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய துணைவேந்தர் குர்மீத் சிங், உலக அளவில் பல்கலைக்கழகத்தின் இந்த சாதனைக்கான முயற்சிகள் மற்றும் பங்களிப்புக்காக ஆசிரியர்கள், அதிகாரிகள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் அனைத்து மாணவர்களின் முயற்சிகளை பாராட்டினார். இவ்வாறு அவர் கூறினார்.